31

# பறாளை விநாயகர் பள்ளு

மஞ்ச ளாவிய மாடங்க டோறும்
    மயில்கள் போன்மட வார்கணஞ் சூழு
மஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை
    யன்ன வன்னக் குழாம்விளை யாடுந்
துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்
    சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி
யிஞ்சி வேலியின் மஞ்சலிற் போய்விழு
    மீழ மண்டல நாடெங்க ணாடே.

மஞ்சு - மேகம் , கணம் - கூட்டம், அம் - அழகு, சரோருகம் - தாமரை, வான்சிறை - பெருமை மிக்க சிறகு, சிறகுக்குப்பெருமையாவது மென்மை. அன்னவன்னக் குழாம் - வன்ன அன்னக் குழாம் எனக் கூட்டி நிறம் விளங்கிய அன்னத்தொகுதி என்றுரைக்க. இனிவான் சிறையையுடைய மடவாரன்ன அன்னக்குழாம் என்றலுமாம். துஞ்சுதல் - நிலைபெறுதல் 'அறந்துஞ்சுஞ் செங்கோலையே' என்றாற்போல, இங்கு, நீர்நிலையிற்றங்குமென்க. இஞ்சி வேலியின் மஞ்சல் - இஞ்சியை வேலியாவுடைய மஞ்சல்: இஞ்சியன் வேலியாகிய மஞ்சலென்றலுமாம்.

அருவி யோதை யிழுமெனுங் குன்றி
    லடைந்த சாரற் குளிர்புனமீதி
லுருவு சேர்தினைப் பூங்கதிர் மேற்கிளி
    யோச்ச வேண்டிப் புலிநகத் தாலி
மருவு வண்குறப் பேதையர் கட்செவி
    மாசு ணப்பண நேர்கவண்மீதி
லிருளி லாத மணிவைத் தெறிந்திடு
    மீழ மண்டல நாடெங்க ணாடே.

ஓதை - ஓசை, இழுமெனல் - ஒலிக்குறிப்பு, சாரம் - மலைப்பக்கம், உருவு சேர்தல் - வடிவு முற்றுப் பெறுதல்: அஃதாவது பயிர்முற்றி விளைதல், ஓச்சல் - ஓட்டுதல், புலிநகத்தாலி - குறப்பெண்கள் அணியும் ஆபரணம். கட்செவி - பாம்பு: கண்ணே செவியாகவுடையது. மாசுணப்பணம் - பெருபாம்பின் படம். கவண் - கிளிமுதலியவற்றைக் கடியுங் கருவி: தட்டை, குளிர், தழலை என்பன இதன் பேதங்கள். கவணில் மணிவைத் தெறிந்திடுமென்க. இருள் இல்லாத மணி - பிரகாசம் பொருந்திய இரத்தினங்கள்.

- சின்னத்தம்பிப் புலவர் -



இலவச விநியோகத்திற்காக